ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ இருத்தும் வியந்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இருத்தும் வியந்து ॥

தம் உள்ளத்தில் எம்பெருமான் வீற்றிருந்த படியை ஆழ்வார் கூறி மகிழ்தல்

‡இருத்தும் வியந்தென்னைத்⋆ தன் பொன்னடிக்கீழ் என்று⋆
அருத்தித்தெனைத்தோர்⋆ பல நாள் அழைத்தேற்கு⋆
பொருத்தம் உடை⋆ வாமனன் தான் புகுந்து⋆ என்தன்
கருத்தையுற⋆ வீற்றிருந்தான் கண்டு கொண்டே (1)

இருந்தான் கண்டு கொண்டு⋆ எனதேழை நெஞ்சாளும்⋆
திருந்தாத ஓர் ஐவரைத்⋆ தேய்ந்தற மன்னி⋆
பெருந்தாள் களிற்றுக்கு⋆ அருள் செய்த பெருமான்⋆
தரும் தான் அருள் தான்⋆ இனியான் அறியேனே (2)

அருள் தான் இனியான் அறியேன்⋆ அவனென்னுள்⋆
இருள் தான் அற⋆ வீற்றிருந்தான் இதுவல்லால்⋆
பொருள் தான் எனின்⋆ மூவுலகும் பொருள் அல்ல⋆
மருள் தான் ஈதோ⋆ மாய மயக்கு மயக்கே (3)

மாய மயக்கு மயக்கான்⋆ என்னை வஞ்சித்து⋆
ஆயன் அமரர்க்கரியேறு⋆ எனதம்மான்⋆
தூய சுடர்ச்சோதி⋆ தனதென்னுள் வைத்தான்⋆
தேசம் திகழும்⋆ தன் திருவருள் செய்தே (4)

திகழும் தன் திருவருள் செய்து⋆ உலகத்தார்
புகழும் புகழ்⋆ தானது காட்டித் தந்து⋆
என்னுள் திகழும் மணிக் குன்றம் ஒன்றே⋆ ஒத்து நின்றான்⋆
புகழும் புகழ்⋆ மற்றெனக்கும் ஓர் பொருளே (5)

பொருள் மற்றெனக்கும்⋆ ஓர் பொருள் தன்னில் சீர்க்கத்
தருமேல்⋆ பின்னை யார்க்கு⋆ அவன் தன்னைக் கொடுக்கும்⋆

www.prapatti.com

கரு மாணிக்கக் குன்றத்துத்⋆ தாமரை போல்⋆
    திரு மார்பு கால் கண் கை⋆ செவ்வாய் உந்தியானே (6)

செவ்வாய் உந்தி⋆ வெண்பல் சுடர்க் குழை தன்னோடு⋆
    எவ்வாய்ச் சுடரும்⋆ தம்மில் முன் வளாய்க் கொள்ள⋆
செவ்வாய் முறுவலோடு⋆ எனதுள்ளத்திருந்த⋆
    அவ்வாய் அன்றி⋆ யான் அறியேன் மற்றருளே (7)

அறியேன் மற்றருள்⋆ என்னையாளும் பிரானார்⋆
    வெறிதே அருள் செய்வர்⋆ செய்வார்கட்குகந்து⋆
சிறியேனுடைச்⋆ சிந்தையுள் மூவுலகும்⋆
    தன்னெறியா வயிற்றில் கொண்டு⋆ நின்றொழிந்தாரே (8)

வயிற்றில் கொண்டு⋆ நின்றொழிந்தாரும் யவரும்⋆
    வயிற்றில் கொண்டு நின்று⋆ ஒரு மூவுலகும்⋆ தம்
வயிற்றில் கொண்டு⋆ நின்றவண்ணம் நின்ற மாலை⋆
    வயிற்றில் கொண்டு⋆ மன்ன வைத்தேன் மதியாலே (9)

வைத்தேன் மதியால்⋆ எனதுள்ளத்தகத்தே⋆
    எய்த்தே ஒழிவேன் அல்லேன்⋆ என்றும் எப்போதும்⋆
மொய்த்தேய் திரை⋆ மோது தண் பாற்கடல் உளால்⋆
    பைத்தேய் சுடர்ப் பாம்பணை⋆ நம் பரனையே (10)

‡சுடர்ப் பாம்பணை நம் பரனைத்⋆ திருமாலை⋆
    அடிச் சேர்வகை⋆ வண் குருகூர்ச் சடகோபன்⋆
முடிப்பான் சொன்னவாயிரத்து⋆ இப்பத்தும் சன்மம்
    விட⋆ தேய்ந்தற நோக்கும்⋆ தன் கண்கள் சிவந்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com